செய்தியாக இருக்கும். அதைப்போல 50 பகுதிகளில் இந்திய மார்க்-2 அடிபம்புகள் தேவைப்படுகின்றன. அதையும் அமைத்துக் கொடுத்து, தொகுதி மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், சென்னை மாநகர மக்களுக்கு முழுமையாகக் குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டி, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். அந்த அடிப்படையில் தற்போது நகரில் 5808 இந்திய மார்க்-2 குழாய்கள் உள்ளன. ஜூலை 2003-க்குள் மேலும் சுமார் 500 புதிய இந்திய மார்க்-2 குழாய்கள் அமைக்க ரூ. 2 கோடியே 20 இலட்சம் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, அது சைதை பகுதி மக்களுடைய தேவைக்கு அத்தியாவசியத் தேவை என்றால் இந்த அரசு அதைப்பற்றி சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், சென்னை மாநகர வாழ் மக்களுக்குத் தற்சமயம் குடிநீர் செல்லாத பகுதிகளுக்கு, குடிநீர்க் குழாய்கள் இணைப்பு இல்லாத பகுதிகளுக்கு தொட்டிகள் மூலமாக, லாரி நடைகள் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் 3400 குடிநீர்த் தொட்டிகள் அங்கு அமைந்துள்ளன. குடிநீர்க் குழாய் இணைப்பு இல்லாத பகுதிகளுக்கு மேலும் இந்த ஆண்டு 600 குடிநீர்த் தொட்டிகள் வாங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு, உத்தரவிட்டுள்ளது என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 388, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

388—

கால்நடை மருந்தகங்கள்

***23554—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003 மே 5]

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையம்பட்டி, மாணிக்கம்பட்டி ஆகிய கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையம்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் செயல்படுவதாலும், மாணிக்கம்பட்டி கிராமத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் பாலமேடு கால்நடை மருந்தகம் செயல்படுவதாலும் அக்கிராமங்களில் கால்நடை மருந்தகம் அமைக்கத் தற்போது சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி.ஆர். ராஜாங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையம்பட்டி, மாணிக்கம்பட்டி ஆகிய ஊர்கள் பின்தங்கிய கிராமப் பகுதிகளைச் சேர்ந்தவை. ஆகவே வருகிற ஆண்டிலாவது விதிகளைத் தளர்த்தி, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு கால்நடை மருத்துவமனையைக் கட்டித் தர நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியத்தில் உள்ள கொண்டையம்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் தற்போது செயல்பட்டு வருகிறது. மேலும் இக்கிராமத்திலிருந்து 8 கிலோமீட்டர் தொலைவில் அலங்காநல்லூர் கால்நடை மருந்தகம் செயல்படுகிறது. மாணிக்கம்பட்டி கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் பாலமேடு கால்நடை மருந்தகமும், 5 கிலோ மீட்டர் தூரத்தில் எர்றாம்பட்டி மற்றும் கோடங்கிப்பட்டி கால்நடைக் கிளை நிலையங்களும், 7 கிலோ மீட்டர் தொலைவில் சத்திர வெள்ளாளப்பட்டி கால்நடைக் கிளை நிலையமும் செயல்படுகின்றன. இக்கிராமங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 12,413 ஆகும். பொதுவாகக் கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக்

கருத்தில்கொண்டும், அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே, செயல்பட்டுவரும் மற்ற கால்நடை நிலையங்களைக் கருத்தில்கொண்டும், கால்நடை மருந்தகம் தொடங்கப்படவுள்ள கிராமத்திற்கும், ஒன்றியத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற கால்நடை நிலையங்களுக்கும் இடையே உள்ள தூரத்தைக் கருத்தில்கொண்டும் தொடங்கப்படுகின்றன.

கால்நடை மருந்தகம் ஓர் இடத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் அதற்கான தீர்மானங்களைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றித் தர வேண்டும். எனவே, துறை விதித்துள்ள நிபந்தனைகளை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றித் தரும் பட்சத்திலும், கொண்டையம்பட்டி கிராமத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் தற்போது செயல்பட்டுவரும் நிலையிலும், 8 கிலோ மீட்டர் தொலைவில் அலங்காநல்லூர் கால்நடை மருந்தகம் செயல்படுவதாலும், மாணிக்கம்பட்டி கிராமத்திலிருந்து 3 கிலோமீட்டர் தூரத்தில் பாலமேடு கால்நடை மருந்தகம் செயல்படுவதாலும், 5 கிலோமீட்டர் தொலைவில் எர்றாம்பட்டி, கோடங்கிபட்டி மற்றும் 7 கிலோ மீட்டர் தொலைவில் சத்திர வெள்ளாளப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்படுவதினாலும் கொண்டையம்பட்டி மற்றும் மாணிக்கம்பட்டி கிராமங்களில் புதிதாகக் கால்நடை மருந்தகம் அமைப்பதற்குச் சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. வி.ஆர். ராஜாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் என்பது மிகவும் பிரபலமான ஜல்லிக்கட்டு நடக்கின்ற ஊர். அந்த ஊரில் கண்டிப்பாக ஒரு கால்நடை மருத்துவமனையை அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கால்நடை மருந்தகம் அமைக்க அரசினுடைய விதிமுறைகள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க முதலில் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தில் 1 ஏக்கர் நிலம் இலவசமாக அளிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

2003 மே 5]

புதிய கால்நடை மருந்தகத்திற்குரிய புதிய கட்டடம் கட்ட நிதி அளிக்க மற்றும் அக்கட்டடம் கட்டப்படும் வரை மருந்தகம் செயல்பட இலவசக் கட்டடம் வழங்கப்பட ஊராட்சி ஒன்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அருகில் உள்ள மருந்தகமோ, கிளை நிலையமோ 8 கிலோ மீட்டர் தொலைவிற்குக் குறைவாக இருக்கக் கூடாது. அக்கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். மேலும் அந்தக் கால்நடைக் கிளை நிலையத்திற்குத் தினமும் 30 கால்நடைகளாவது வந்து சிகிச்சை பெற வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்களின் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 389, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

முற்பகல் 10-40

389—

கைமுறைக் காகித அலகுகள்

***6940—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1999-ல் மூடப்பட்ட 15 கதர் கிராமக் கைமுறைக் காகித அலகுகளை மீண்டும் திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்காணும் பொருள் குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், பொதுவாக மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதிலும் குறிப்பாக என்னுடைய வந்தவாசி தொகுதி பின்தங்கிய நிலையில் மட்டும் இல்லை; வறட்சியின் கோரப் பிடியிலே இருக்கிறது. அங்குள்ள மக்களின் வாழ்க்கை ஜீவாதாரம் என்னவென்று சொன்னால், 80 சதவீத மக்கள் மானாவாரி விவசாயத்தை நம்பி வாழக்கூடிய மக்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்